
## திராவிடத்தால் வாழ்கிறோம்

948

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## மாநாடு

ர.பிரகாசு

79

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

# பௌத்தமும் சுயமரியாதையும் வேறு வேறல்ல!

*1932-ஆம் ஆண்டு ஏப்ரல் 21, 22, 23 ஆகிய 3 நாட்கள் கோலார் தங்க வயலில், சுயமரியாதை இயக்கத்தின் சார்பில், 3 முக்கிய மாநாடுகள் நடைபெற்றன. முதல் நாள் 'பௌத்தர் மாநாடு', இரண்டாவது நாள் 'சுயமரியாதை மாநாடு', மூன்றாவது நாள் 'ஆதிதிராவிடர் மாநாடு' என 3 நாட்களும் கோலார் தங்க வயல் களைகட்டியது.*

*முதல் நாளில், லட்சுமி நரசு தலைமையில், மாலை 3.30 மணிக்கு பௌத்தர் மாநாடு தொடங்கியது. அயோத்திதாசரின் 'தமிழன்' இதழை, அப்போது நடத்தி வந்த ஜி.அப்பாதுரை, வரவேற்புரை ஆற்றினார். இந்தியாவில் பௌத்தம் நிலைபெற்ற காலம், கௌதம புத்தரின் சீரிய நெறிகள் முதல் ஆரிய சூழ்ச்சியால் பௌத்தம் சிதைக்கப்பட்டது வரை தனது வரவேற்புரையில் எடுத்துச் சொன்னார். அதன்பின்னர், தலைமையுரையாற்றிய லட்சுமி நரசு, பௌத்தமும் சுயமரியாதையும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை எனக் கூறினார். அதன்பின்னர், வி.ரத்தினம், சென்னை வி.பி.எஸ்.மணியர் ஆகியோரும் பௌத்தம் குறித்து உரையாற்றினர்.*

*'மனிதனின் மத சரித்திரம்' என்ற தலைப்பில், குத்தூசி குருசாமியும், 'இந்தியரின் தேசியமும் ஜாதியும்' என்ற தலைப்பில், குஞ்சிதம் அம்மையாரும் விரிவான உரை நிகழ்த்தினர். இதில் குஞ்சிதம் அம்மையார் ஆங்கிலத்தில் உரையாற்ற, பின்னர் குருசாமி அதை தமிழில் மொழிபெயர்த்தார். அடுத்து, கேப்டன் ஹெச்.எம்.ரே அவர்கள் சுயமரியாதை, பௌத்தத் தன்மைகளைப் பற்றி விரிவாக சிறப்புரை நிகழ்த்தினார். குஞ்சிதம் அம்மையாரின் ஆங்கிலச் சொற்பொழிவையும் வெகுவாகப் பாராட்டினார்.*




*இரண்டாவது நாள் மாலையில், குத்தூசி குருசாமி தலைமையில், சுயமரியாதை மாநாடு கூடியது. வரவேற்புரையாற்றிய எஸ். முனுசாமியார், "விஞ்ஞான சாஸ்திரம், பூகோள சாஸ்திரம், தத்துவ சாஸ்திரம், நாகரிகம், கைத்தொழில் முதலியவற்றில் மேல்நாட்டார் தலைசிறந்து முன்னேற்றமடைந்து வரும் நிலையில், நம் நாடோ கல்வியின்றி வேதம், சாஸ்திரம், புராணம், இதிகாசம், இவற்றில் இருந்து தோன்றிய ஜாதிப் பாகுபாடு, தீண்டாமை, புரோகிதம் போன்றவற்றில் மூழ்கி, ஏழ்மை நீங்காது, பண்டைய பெருமைகளை நினைத்து நினைத்து, மனப்பால் பருகி, தாழ்ந்த நிலையில் உள்ளனர்" என அன்றைய தமிழர் நிலையை கண்முன் நிறுத்தும் அரிய கருத்துகளை எடுத்துரைத்தார்.*

*குத்தூசி குருசாமி இம்மாநாட்டில் நகைச்சுவை உணர்வு பொங்க, சுமார் 3 மணி நேரம் தலைமையுரை நிகழ்த்தினார். குஞ்சிதம் அம்மையார், வி.பி.எஸ்.மணியர், ஜி.அப்பாதுரையார், ஏ.பி.பெரியசாமி, ஜோலார்பேட்டை வி.பார்த்தசாரதியார், லட்சுமி நரசு ஆகியோரும் சுயமரியாதை இயக்கத் தத்துவங்கள் குறித்து, கோலார் தங்கவயல் மக்களுக்கு விளக்கினர். செங்கல்பட்டு, ஈரோடு, விருதுநகர் சுயமரியாதை மாநாடுகளின் தீர்மானங்கள் முழுமையாக ஏற்கப்பட்டன.*

*மூன்றாவது நாளில், ஏ.பி.பெரியசாமி புலவர் தலைமையில், ஆதி திராவிடர் மாநாடு கூடியது. ஆதி திராவிடர்களின் முன்னேற்றம் குறித்து, எம்.எல்.சி.யாக இருந்த ஒ.வி.ராஜகோபால், வி.வி.டேவிட் பெருமாள், எம்.இராமசாமி, பி.என்.வீராசாமி உள்ளிட்ட பலர் உரையாற்றினர். தனித்தொகுதி முறையை ஆதரித்தும், டாக்டர் பி.ஆர். அம்பேத்கர், இரட்டைமலை சீனிவாசன் ஆகியோரைப் பாராட்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தனித்தொகுதி முறைக்கு எதிராக, கூட்டுத்தொகுதி முறையை வலியுறுத்திய எம்.சி.ராஜா - மூஞ்சே ஒப்பந்தத்தைக் கண்டித்தும் இம்மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*

**...கூட்டம் திரளும்**

## சீர் வாசகர் வட்ட விருது விழா!

சீர் வாசகர் வட்டம், தமிழ்நாட்டில் வாசிப்பு சார்ந்த பல்வேறு செயல்பாடுகளை, முன்னெடுத்து வருகிற ஓர் அமைப்பு. இந்த வாசகர் வட்டத்தின் மக்கள் பதிப்பு நூல்கள், ஆயிரக்கணக்கான இளைஞர்களை வாசிப்பின் பக்கம் ஈர்த்து வருகிறது. பள்ளி, கல்லூரிகளில், வாசிப்பு சார்ந்த பல முன்னெடுப்புகளைச் செய்து வருகின்றனர். சீர் வாசகர் வட்டத்தின் சார்பில், கடந்த ஆண்டு முதல் பதிப்பு செயல்பாடுகளில் அரசியல் உணர்வோடு இயங்குபவர்களுக்கு, ஒரு லட்ச ரூபாய் பண முடிப்புடன் விருதளித்து சிறப்பிக்கப்பட்டு வருகின்றனர். முதல் விருதினை கடந்த ஆண்டு, அறிஞர் பொதிய வெற்பன் பெற்றிருந்தார்.

இந்த ஆண்டுக்கான விருது, திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி அவர்களுக்கு, பெரியாரின் குடியரசு நூல் பதிப்புப் பணிகளுக்காக வழங்கப்பட உள்ளது. இதற்கான விருது வழங்கும் விழா வருகிற செப்டம்பர் 7-ஆம் தேதி ஞாயிறு அன்று மாலை 5.30 மணிக்கு, ஈரோட்டில் உள்ள மல்லிகை அரங்கில், நடைபெற உள்ளது. 'காம்ரேட் கன்ஸ்டா' (Comrade Gansta) பாப் இசைக் குழுவின் அரசியல் பாடல்கள், நவீன நாடகம், கொளத்தூர் மணி அவர்கள் குறித்து ஆவணப்படம், நூல்கள் வெளியீடு, உரைகள், கலந்துரையாடல், புத்தகக் காட்சி எனப் பல்வேறு நிகழ்ச்சிகளை, சீர்வாசகர் வட்டம் ஒருங்கிணைத்துள்ளது. வாசகர் வட்ட உறுப்பினர்கள் தாண்டி, பல்வேறு ஆளுமைகளும் கலந்து கொள்ளும் இந்த நிகழ்ச்சி, அரசியல் உணர்வாளர்கள் கூடும் சங்கமமாக, அறிவுத் திறவுகோலாக அமையும். செல்வோர் திட்டமிடுக.

## ஃப்ளாஷ்பேக்



### கல்வெட்டுக்கு நிகரான புகைப்படம்!



மு.கருணாநிதி

எனது தாத்தா திருவரங்கம் க.இராசவேலு அவர்கள், கழக முன்னோடி. பள்ளிப் பருவத்தில் திராவிடர் இயக்கத்தில் இருந்து செயல்பட்டு, கழகம் தொடங்கப்பட்டபோதே, அதில் இணைந்து செயல்பட்டவர். 'செண்பகத் தமிழ் அரங்கு' எனும் அமைப்பினைத் தொடங்கி, பல கூட்டங்கள் நடத்தியவர். பேரறிஞர் அண்ணா அவர்களுடன், என் தாத்தா இருக்கும் இந்தப் படம் எங்களுக்கு, வரலாற்றில் நிலைத்திருக்கும் கல்வெட்டுகளுக்கு இணையானது. அவர் வழியில், என் கழகப் பணி என்னை நிறைவுகொள்ளச் செய்கிறது.

**- மு.கருணாநிதி,**
**இளைஞர் அணி மாவட்டத் துணை அமைப்பாளர்,**
**திருச்சி மத்திய மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## வாசனை படிப்பறை

**கௌதம் ராஜ்**

79


**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# பயணங்கள் தரும் பாடம்!

*புத்தகங்களுக்கு அடுத்து நமக்கு அதிகம் கற்பிப்பவை பயணங்கள். பயணிப்பதன் மூலம் கிடைக்கும் அனுபவங்களும், நினைவுகளும் ஒரு புதிய உலகத்தை நமக்கு அறிமுகப் படுத்துகின்றன. இப்படியான பயண நினைவுகளைக் கொண்டு எழுதப்படுபவை பயண இலக்கியங்கள்.*

*நம்முடைய திராவிட இயக்கத் தலைவர்கள் ஆழ்ந்த அரசியல் செயற்பாடுகளுக்கு மத்தியிலும் அயல்நாடுகளுக்குப் பயணங்களை மேற்கொண்டனர். அவை பற்றி கடிதங்கள், கட்டுரைகள், நினைவுக் குறிப்புகள் எழுதி, தன் தொண்டர்களுக்குக் கடத்தினர்.*

*அந்த வகையில், பேரறிஞர் அண்ணா அவர்கள் மேற்கொண்ட பயணங்கள் குறித்து, தன் தம்பிகளுக்கு எழுதிய கடிதங்கள், கட்டுரைகள், அண்ணாவின் பயணம் குறித்து வெளியான செய்திக் குறிப்புகள், புகைப் படங்கள், அப்பயணங்களின் காலவரிசை ஆகியவை தொகுப் பாக்கம் பெற்ற நூல் 'பேரறிஞர் அண்ணாவின் பயண இலக்கியம்'. அண்ணாவின் புதல்வர் டாக்டர் சி.என்.ஏ.பரிமளம் தொகுத்த இந்நூலை, பூம்புகார் பதிப்பகம் வெளியிட்டுள்ளது.*




*வெளிநாட்டுப் பயணங்கள் மட்டுமன்று, தமிழ்நாட்டிற்குள் அவர் மேற்கொண்ட பயணங்களும், அண்டை மாநிலங்களுக்குச் சென்ற குறிப்புகளையும், வடநாட்டுப் பயண அனுபவங்களையும் இந்நூலில் காண முடிகிறது.*

*தி.மு.கழகம் தொடங்கப்பட்ட ஆரம்ப ஆண்டுகளில் தென் தமிழ்நாட்டில் இயக்கம் எவ்வாறு வளர்ந்து வருகிறது என்பதை, நெல்லைப் பயணம் மூலம் கடிதமாகத் தீட்டுகிறார். அதுபோலவே பெரியாருடன் ஹரித்வார் பயணத்தின்போது, எம்.என். ராய் உறவினர் இல்லத்தில் தங்கியது, தேவிகுளம் பீர்மேடு பகுதிகளுக்குச் சென்றபோது கண்ணன்-தேவன் தேயிலை தோட்ட வரலாற்றைத் தெரிவிப்பது, டெல்லிக்கு இரண்டுமுறை காரிலேயே மேற்கொண்ட பயணங்கள், ஆந்திராவின் ராயல சீமா பகுதியில் பொதுமக்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஆங்கிலத்தில் உரையாற்றியது, மும்பை தாராவியில் தமிழர்கள் படும் துயரங்களைக் கண்டு மனம் வருந்தி கட்டுரையாக வடித்தது, 1962-ஆம் ஆண்டு தேர்தல் தோல்விக்குப் பிறகு 'தோல்வி கிடைத்ததும் நான் சென்று தங்கியிருந்த இடம் ஜெயவிலாசம் - ஜெயநகர்! போதுமா விசித்திரம்!' என்று ஊக்கத்துடன் எழுதிய கடிதம் ஆகியவை இத்தொகுப்பில் அடங்கும். இவை ஒவ்வொன்றும் ஏராளமான தகவலை நமக்குக் கடத்துகின்றன.*

*அண்ணா அமெரிக்க சென்றபோது, நியூயார்க்- வாஷிங்டன்-சான் பிரான்சிஸ்கோ மாகாணங்களில் அவர் மேற்கொண்ட சந்திப்புகளை எல்லாம் பத்திரிகையாளர் சாவி எழுதிய 'அமெரிக்காவில் அண்ணாதுரை', எம்.எஸ்.உதயமூர்த்தி எழுதிய 'யேல் பல்கலைக்கழகத்தில் அண்ணாவின் சிந்தனை விருந்து' ஆகிய கட்டுரைகள் மூலம் அறிய முடிகிறது.*

*தென்கிழக்காசிய நாடுகளுக்கு அவர் மேற்கொண்ட பயணம் குறித்தும், அப்போது அவருக்குக் கிடைத்த கோலாகலமான வரவேற்புகள் பற்றியும் இந்நூலில் இடம்பெற்றுள்ள 'தமிழ்முரசு', 'தமிழ் மலர்' இதழ் கட்டுரைகள் மூலம் அறிய முடிகிறது. அண்ணா, இறுதியாக மேற்கொண்ட அமெரிக்க பயணக் குறிப்புகளைக் கொண்டு இந்நூலாசிரியர் எழுதியிருக்கும் உருக்கமான கட்டுரை கண்ணீர் ததும்ப செய்யும் அளவுக்கு உணர்வுபூர்வமானது.*

*தேடல் நிறைந்த மனிதர்களின் பயணம் முடிவற்றது, தேடல் இருக்கும் வரை பயணம் தொடரும் என்பதுதான் அண்ணாவின் பயண இலக்கியம் நமக்குக் கடத்தும் செய்தி.*

**...வாசிப்போம்.**

## நினைவுக் குருவூலம் — தொடர் போராட்டம்!

13.10.63 அன்று நுங்கம்பாக்கத்தில், கழகத்தின் இந்தி எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில்தான், அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவை எரித்து, எதிர்ப்பைத் தெரிவிக்கும் போராட்டமும், மத்திய அரசு அலுவலகங்கள் முன்பு மறியல் போராட்டத்தையும் அறிவித்தார், பேரறிஞர் அண்ணா. "17.11.63-இல் தொடங்கும் அறப்போர் மாவட்ட வாரியாக, 1965-ஆம் ஆண்டு ஜனவரி வரை தொடர்ந்து நடைபெறும்" என்றும் அறிவித்தார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131